# அலகு -IV

# கல்வியில் மொழிக்கொள்கை




**S.NITHYA**

**Assistant Professor**

# மொழி

மொழி என்பது ஒலி குறிப்புகள் மற்றும் எழுத்துக்களின் உதவியோடு ஒருவர் மற்றவர்களுடன் தங்களது எண்ணங்களை பகிர்ந்து கொள்ள உதவும் ஒரு கருவியாகும்.



# மொழி ஏன் அவசியமாகிறது?


1. நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்த அவசியமாகிறது
2. கருத்துக்களை பரிமாறிக்கொள்ள அவசியமாகிறது
3. நம்முடைய பண்பாடு கலாச்சாரத்தை புரிந்து கொள்ள அவசியமாகிறது
4. மனிதனின் சமூகவியல் செயல்பாடு பூர்த்தியடைய அவசியமாகிறது
5. வணிகத் தொடர்பை மேம்படுத்திக்கொள்ள அவசியமாகிறது
6. மற்ற உயிர்களிடம் இருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்ட அவசியமாகிறது
7. மொத்தத்தில் நம்முடைய ஆளுமையை மேம்படுத்திக்கொள்ள மொழி என்பது அவசியமான ஒன்றாகிறது.

# இந்தியாவில் மொழி


1. இந்தியா என்பது பல்வேறு மொழி பேசும் மக்களை உள்ளடக்கிய நாடாகும்.
2. சுதந்திர இந்தியாவில் மாநிலங்கள் மொழிவாரி அடிப்படையில் பிரிக்கப்பட்டதிலிருந்து மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.
3. இந்தியாவில் சுமார் 19 ஆயிரத்து 500 மொழிகள் பேசப்படுவதாக ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது.
4. இந்தியாவிற்கான தேசிய மொழி என்று எதுவும் கிடையாது.
5. ஹிந்தியும் ஆங்கிலமும் இந்தியாவின் அலுவல் மொழியாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.
6. சுமார் 22 மொழிகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியாவில் மொழிக்கொள்கைகள்

# சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவில் மொழி கொள்கைகள்



Gurukula System



- வேதகாலத்தில் பயிற்றுமொழி **சமஸ்கிருதம்** தொடர்பு மொழி வட்டார மொழி.
- புத்தமத காலத்தில் கல்வியானது **பாலி மொழி** மூலமாக கற்பிக்கப்பட்டது
- இடைப்பட்ட காலம் அல்லது முகமதியர் ஆட்சி காலத்தில் **உருது, அரபி, பாரசீகம்** போன்றவை பயிற்று மொழியாகவும் தொடர்பு மொழியாகவும் பயன்படுத்தப்பட்டது .
- ஐரோப்பியர்களின் வருகைக்கு பின்பு **ஆங்கிலம்** பயிற்று மொழியாகவும் **உள்ளூர் வட்டார மொழிகள்** தொடர்பு மொழியாகவும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது.



# சுதந்திரத்திற்கு பின்பு இந்தியாவில் மொழிக் கொள்கைகள்




- தாய்மொழி அல்லது வட்டார மொழிகள் பயிற்று மொழியாக கல்விக்கூடங்களில் கற்பிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது.
- தாய்மொழிவழிக்கற்பது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமையின் கீழ் சேர்க்கப்பட்டது.
- இந்தியும் ஆங்கிலமும் அலுவல் மொழியாக அறிவிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள மக்களை இணைக்க இந்தியை இணைப்பு மொழியாக உருவாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

# மொழி குறித்து கல்வி குழுக்களின் பரிந்துரைகள்

# இடைநிலை கல்வி குழு (1952-53)

## Secondary Education Commission



- தாய்மொழி அல்லது வட்டார மொழியிலேயே இடைநிலை கல்வி முறை கல்வியானது கற்பிக்கப்பட வேண்டும்.
- மொழி சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழியிலேயே கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்தி தர வேண்டும்.
- மேல்நிலை கல்வியில் **இரண்டு மொழிகள்** கற்க வேண்டும் அவற்றில் ஒன்று தாய்மொழி அல்லது வட்டார மொழி ஆகும் மற்றும் ஒன்று இந்தியோ, ஆங்கிலமோ அல்லது உயர் ஆங்கிலமோ இருக்க வேண்டும்.

# மத்திய கல்வி ஆலோசனை வாரியம் (1956)

## Central Advisory Board of Education

- மத்திய கல்வி ஆலோசனை வாரியம் இடைநிலை கல்வி குழுவின் இருமொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.
- இது **மும்மொழிக் கொள்கையை** பரிந்துரை செய்தது.
- மும்மொழி கொள்கையை என்பது தாய்மொழி அல்லது வட்டார மொழி, ஆங்கிலம் அல்லது நவீன ஐரோப்பிய மொழி, இந்தி அல்லது ஏனைய இந்திய மொழி என்பதை உள்ளடக்கியதாக பரிந்துரை செய்தது.

# கோத்தாரி கல்விக்குழு (1964-66)

## Kothari Commission

- கோத்தாரி கல்வி குழுவானது மத்திய கல்வி ஆலோசனை வாரியத்தின் மும்மொழிக் கொள்கை பரிந்துரையை முழுமையாக ஒப்புக் கொள்ளவில்லை.
- இக்கல்வி குழு **மும்மொழி கல்வி முறையை மாற்றி அமைத்தது.**
- கோத்தாரிக் கல்விக் குழு முதல் மொழியாக தாய்மொழி அல்லது வட்டார மொழியும், இரண்டாம் மொழியாக அலுவலக மொழியான ஆங்கிலம் அல்லது இந்தி, மூன்றாம் மொழியாக நவீன இந்திய அல்லது ஐரோப்பிய மொழி ஏதாவது ஒன்றை நடத்த வேண்டும் என பரிந்துரை செய்தது.



# தமிழ்நாட்டில் மொழிக்கொள்கை

- ✓ தமிழ்நாடு ஆரம்பத்திலிருந்து **இருமொழிக் கொள்கை மட்டுமே** பின்பற்ற வேண்டும் என கூறியது.
- ✓ இன்று வரை தமிழகம் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து வருகிறது.
- ✓ பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவான தமிழ் மொழியை விட சில நூறு ஆண்டுகளுக்கு முன் உருவான இந்திக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுப்பதை தமிழ்நாடு ஒருபோதும் விரும்பவில்லை.
- ✓ கட்டாய இந்தி திணிப்பு தமிழக மக்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்றும் என தமிழகம் கருதியது .
- ✓ உலகளாவிய மொழியான ஆங்கிலம் இருக்கும்போது இந்தியை முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என தமிழ்நாடு இன்றளவும் கருதுகிறது.


# பயிற்று மொழி

கல்விக்கூடங்களில் பாட கருத்துக்களை ஆசிரியர்கள் மாணவர்களிடம் கொண்டு சேர்க்க பயன்படுத்தும் மொழி **பயிற்று மொழி** அல்லது **கற்பித்தல் மொழி** என அழைக்கப்படும்.



# அறிஞர்களின் பார்வையில் பயிற்றுமொழி

# இரவீந்திரநாத் தாகூர்



தாகூர் குழந்தைகளிடம் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியும் பன்னாட்டு உணர்வை வளர்ப்பது மே கல்வியின் நோக்கங்கள் என்று கூறினர் அதற்காக குழந்தைகளுக்கு தாய் மொழி வழியில் கல்வி பயிற்றுவிப்பது உடன் பிற நாட்டு மொழிகளையும் கற்பிக்க வேண்டும் என அறிவுறுத்தினார் அதன் தொடர்ச்சியாக தன்னுடைய விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தில் தாய்மொழி கல்வியுடன் சீன மொழி போன்ற பிற நாட்டு மொழிகளையும் தாகூர் கற்பித்தார்.




# மகாத்மா காந்தியடிகள்

மகாத்மா காந்தியடிகள் ஆதார கல்விமுறையை இந்தியாவில் வலியுறுத்தினார் கல்வி முறையின் படி எல்லா குழந்தைகளும் 7 ஆண்டுகளுக்கு இலவசமாக தாய்மொழி வழியில் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

# சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வீகத் தன்மையும், பூரணத்துவம், முழுமையும் இயற்கையாகவே பொதிந்துள்ளன. அதனை கண்டறிந்து வெளிக்கொண்டு வருவதே உண்மையான கல்வி என அறிவுறுத்தினார். மனிதனை மனிதனாக உருவாக்கும் கல்வி முறையினை சுவாமி விவேகானந்தர் பரிந்துரை செய்தார். கலை திட்டமானது பன்முகத் தன்மை கொண்டதாக அமையவேண்டும் என்றும், பிராந்திய மொழியுடன், சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளும் கற்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.



# அறிஞர்களின் கருத்து ஒற்றுமை

மிகச்சிறந்த அறிஞர்களான ரவீந்திரநாத் தாகூர் காந்தியடிகள், சுவாமி விவேகானந்தரின் மொழி குறித்த பார்வையை ஒப்பீடு செய்யும்போது **இம்மூவரும் தாய்மொழி வழியே கற்பிக்கப்பட வேண்டும்.** அதிலும் குறிப்பாக ஆரம்பக் கல்வி தாய் மொழியிலேயே அமைய வேண்டுமென வலியுறுத்துவதை நாம் அறிந்துகொள்ள முடியும்.




# தாய்மொழிவழி கல்வி ஏன் அவசியம்?

1. பாட கருத்துக்களை நன்கு புரிந்துகொள்ள தாய்மொழிவழிக் கல்வியே பெரும் உதவியாக இருக்கும்.
2. தாய்மொழிவழிக் கல்வியே மாணவர்கள் சுயமாக சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது.
3. தாய்மொழிவழிக் கல்வியை பயில்வதால் மாணவர்கள் எந்தவிதமான சுமையும் இல்லாமல் எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் கல்வி பயில முடிகிறது.
4. தாய்மொழிவழி கல்வி படிப்பதன் மூலமாக மாணவர்களின் தன்னம்பிக்கை மேம்படுகிறது.



# மேற்கோள் நூல்கள்

- தற்கால இந்திய சமுதாயத்தில் கல்வி - முனைவர் நாகராஜன்
- தற்கால இந்திய சமுதாயத்தில் கல்வி - முனைவர் மீனாட்சி சுந்தரம்
- தாய்மொழிவழிக் கல்வி -ஆயிஷா நடராஜன்
- கலைத்திட்டத்தில் விரவியுள்ள மொழி - முனைவர் நாகராஜன்
- இந்திய அரசியல் வரலாறு - ஆர் முத்துக்குமார்



நன்றி